17

# வைணவம் வளர்த்த தமிழ்

அ. தர்ஷினி & திரு.வீ.கோபிநாத்
உளவியல் துறை
பூ.சா.கோ அர. கிருட்டி ணம்மாள் மகளிர் கல்லூரி, கோவை
23mpy010@psgrkcw.ac.in , gobinath@psgrkcw.ac.in

**ஆய்வுச்சுருக்கம்:**

ஒவ்வொரு மொழியும் அதைப் பேசுகிற மக்களின் கருத்துக்கும் பண்பாட்டிற்கும் ஏற்ப வளர்ச்சியடைகிறது. மக்களின் பண்பாடும் கருத்துகளும் பெரும்பாலும் அவர்கள் சார்ந்துள்ள மதக்கொள்கையை ஒட்டி அமைகின்றன. பண்டைக் காலத்தில், இலக்கியங்களை வளப்படுத்துவதில் மதங்கள் முதன்மையாக இருந்தன. மதங்கள் வழியாக மக்களுக்குக் கொள்கைகள் வளர்ந்து, அந்தக் கொள்கைகள் அவர்களின் இலக்கியங்களிலே இடம் பெற்றன. இந்த முறைப்படியே, தமிழ் மொழியும் பண்டை காலத்திலே சமயங்கள் சார்பாக வளர்ந்து வளம்பெற்றது. சமயங்களில் சைவம் மற்றும் வைணவச் சமயங்கள் தமிழின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியது. இதில் வைணவர்கள் தங்களின் சமயக் கருத்துகளைப் பரப்ப தமிழைக் கருவியாக கைக்கொண்டனர்.

**திறவுச்சொற்கள்:**

மதக்கொள்கைகள், சமயங்கள், இலக்கியங்கள், சைவம், வைணவம்

**முன்னுரை:**

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு வைணவ சமயத்தின் பங்கு முக்கியமானது. வைணவம் என்பது மிகமிகத் தொன்மையான மதம். வடமொழியில் அமைந்த வேதங்களிலும் மிகமிகத் தொன்மையான தமிழ்நூலான தொல்காப்பியம் முதலான நூல்களிலும் வைணவம் தொடர்பான கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. வைணவ ஆச்சாரியர்கள் அருளியுள்ள நூல்களை அடிப்படையாகக் கொண்டோ, அல்லது அந்நூல்களுக்கு விளக்கங்களாகவோ பல்லாயிரக்கணக்கான நூல்கள் தோன்றியுள்ளன.

**வைணவத்தின் தோற்றம்:**

வைணவ சமயம் திருமாலை முழுமுதற்கடவுளாக வழிபடும் சமயம். வைணவம் என்றும் அழைக்கப்படும் இச்சமயம் இந்து சமயத்தின் ஆறு உட்பிரிவுகளுள் ஒன்றாகும். உலகில் தீமைகள் ஓங்கும் போது காக்கும் கடவுளான விஷ்ணு, மனித வடிவில் அவதாரம் எடுத்த அவற்றை அழித்து நல்லவரைக் காப்பார் என்பது வைணவர் நம்பிக்கை. வைணவ கடவுளான விஷ்ணு எண்ணற்ற அவதாரங்கள் எடுத்துள்ளதாகவும் நம்புகிறார்கள். திருமாலின் எண்ணற்ற அவதாரங்களில் குறிப்பிடத்தக்வையான மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனன், பரசுராமன், இராமன், பலராமன், கிருஷ்ணன், கல்கி என்ற பத்து அவதாரங்கள் தசாவதாரங்கள் என்று

அழைக்கப்படுகின்றன. வைணவ சமயத்தில் முக்கிய நூல்கள் வேதம், உபநிஷத்து, பகவத்கீதை, பஞ்சரந்தர ஆகமம், மகாபாரதம், ராமாயணம், பாகவதம், விஷ்ணு, கருட, நாரதிய, பத்ம, வராக புராணங்கள் ஆகும். கிபி 300 முதல் 500 வரை மௌரியர் மற்றும் குப்தர்களின் ஆட்சி காலம் வைணவ வரலாற்றில் முக்கியமான காலகட்டம். குப்தர் காலத்தில் செல்வாக்கு பெற்றிருந்த வைணவம் தெற்காசிய முழுவதும் பரவியது.

**வைணவம் வளர்த்த பண்புகள்:**

திருமாலிடம் அன்பு பூண்டவர்கள் வைணவர்களை. அவனே முழுமுதல் தெய்வம் என்ற கருத்துடையவர்கள். உலகம், உயிர்கள் எல்லாவற்றையும் காக்கும் தொழிலை திருமால் செய்கின்றார் என கூறுகிறது வைணவம். இறைவனிடம் "நீயே சரணம்" என்று அடைக்கலம் கொண்டால் எல்லா துன்பங்களிலிருந்தும் விடுபடலாம் என்று கூறுகிறது வைணவம். இந்திரலோகத்தை ஆளும் பேற்றைவிடத் திருமாலின் இணையடிகளை தொழும் பேரே உயர்ந்தது என்கிறனர் ஆழ்வார்கள்.

**"பச்சைமா மலைபோல் மேனிப் பவளவாய் கமலச் செங்கண்**
**அச்சுதா அமரர் ஏறே ஆயத்தம் கொழுந்தே என்னும்**
**இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்**
**அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகரு ளானே!" (நாலா, மர்ரே:872)** என்பது தொண்டரடிப்பொடியாழ்வாரின் கூற்றாகும்.

**வைணவம் காட்டும் சமரசம்:**

"அரியும் சிவனும் ஒண்ணு; அறியாதவர் வாயில் மண்ணு" என்பது பழமொழி. இரு சமயங்களுக்கிடையே பெரிய வேறுபாடுகள் இல்லை. அறியாதவர்கள் வேறுபாடுகளை கற்பித்து மதச்சண்டைகளை உருவாக்கி விட்டனர். ஆழ்வாருக்குத் திருமாலும் சிவபெருமானும் வேறு வேறாகத் தோன்றவில்லை.

**"தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்**
**சூழ் அரவும் பொன்நாணும் தோன்றுமால் சூழும்**
**திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு**
**இரண்டுருவும் ஒன்றாய் இணைந்து" (நாலா, மர்ரே: 2344)**

என்கிறார் பேயாழ்வார் தாழ்சடை, மழுவாயுதம், அரவு (பாம்பு) ஆகியன சிவபெருமானுக்கு உரியன. நீண்டமுடி, சக்கரம், பொன்நாண் ஆகியன பெருமாளுக்கு உரியன. இவையெல்லாம் ஒன்றாகத் தோன்றுகின்றன என்கிறார் ஆழ்வார். இதுவே தமிழர் கண்ட சமரச ஞானம்.

**வைணவ மெய்ப்பொருள்:**

உலகத் தோற்றத்திற்கு முதற்காரணம், துணைக்காரணம், நிமித்த காரணம் என்ற மூன்றாகவும் இருப்பவன் திருமால். ஒரு பானை உருவாகுவதற்கு முதற்காரணம் மண்; பானையை உருவாக்கும் குயவன் நிமித்த காரணம்; சக்கரம் துணைக்காரணம். இதேபோல உலகம் உருவாக அனைத்துமாகவும் இருப்பவன் திருமால் என்கிறது வைணவம். வைணவத்தில் பக்தி நெறி என்பது விரதம், தவம்,

தியானம், பிராணாயாமம் எனும் மூச்சுப்பயிற்சி ஆகியவற்றையெல்லாம் உட்கொண்டது. இந்த நெறி எல்லாராலும் பின்பற்ற முடியாது. எனவே வைணவம் **பிரபத்தி நெறி** என்ற ஒன்றை வகுத்துத் தந்தது. பிரபத்தி என்றால் சிறந்த பக்தி என்பது பொருள். இந்த நெறிக்குக் கட்டுப்பாடுகள் இல்லை. நீராடுதல், மந்திரம் சொல்லுதல் போன்றவையெல்லாம் பிரபத்தி நெறியில் இல்லை.

**"புகழ் ஒன்று இல்லா அடியேன் உன்**
**அடிக்கிழ் அமர்ந்து புகுந்தேனே!"**

என்ற எளிமையே இறைவனை அடையப் போதுமானது.

**திவ்வியப் பிரபந்தம்:**

ஆழ்வார்கள் பன்னிருவரும் பாடிய நாலாயிரம் பாசுரங்கள் திவ்விய பிரபந்தம் எனப்பெறும். இது திராவிட வேதசாகரம் அதாவது தமிழ் வேதக்கடல் எனப்பட்டது. நாலாயிரத்தில் 1296 பாசுரங்கள் நம்மாழ்வாரால் பாடப்பட்டவை. நம்மாழ்வார் ஆழ்வார்களில் தலைமையானவர். இவர் பாடிய 1296 பாசுரங்களில் 1102 பாசுரங்கள் திருவாய்மொழி எனப்படும்.

இதனை,

**"சாந்தியினை நேராக உடைய நல்ல**
**சடகோபர் அமுதத்தைத் தாமே உண்டு**
**தீந்தமிழ் என்று ஒருகோடி வேதமாகும்**
**செய்ய திருவாய்மொழிந்தார்...."**

என்று பிற நூலும் பாராட்டக் காணலாம். "வடமொழி வேத வேதாந்தங்களில் தோன்றுகிற ஐயந்திரிபுகளைத் திருவாய்மொழியினைக் கொண்டு தெளிகின்றோம்" என்று வேதாந்த தேசிகர் என்ற பேரறிஞர் கூறுகின்றார். இந்தத் திருவாய்மொழிக்கு ஐந்து உரைகள் உள்ளன.

**வைணவப் பெரியார்கள் வளர்த்த பண்பாடு:**

வைணவப் பெரியார்கள் திருமாலின் அவதாரங்களில் ஈடுபாடு உள்ளவர்கள். இராம அவதாரத்தையும் கிருஷ்ண அவதாரத்தையும் மனம் குளிரப் பாடுபவர்கள். கொடியவர்களை அடக்கி நல்லோர்களை காக்கின்ற இறைவனின் திருக்குணத்தை இவர்கள் பெரிதும் போற்றக் காணலாம். மனிதர்களைப் பாடுவதில்லை என்று உறுதி பூண்ட பெரியோர்கள் இவர்கள்.

**“என்னாவது எத்தனை நாளைக்குப் போதும் புலவீர்காள்!**
**மன்னா மனிசரைப் பாடிப் படைக்கும் பெரும் பொருள்"**

**(நாலா, மர்ரே:3212)**

என்று கேட்கிறார் நம்மாழ்வார். இந்தப் பொருள் எதற்கு? எத்தனை நாளைக்குப் போதும்? என்று கூறி இறைவனைப் பாடி இந்தச் சன்மத்தை அதாவது பிறவியை ஒழித்துக் கொள்வதே நல்லது என்கிறார் அவர். இறைவனையே வணங்கும் பெருமை, அடியார்களின் முன் எளியவராய்ப் பணிந்து வாழும் தன்மை, இறைவனின் அவதாரப் பெருமைகளைப் பேசுதல் ஆகியவற்றை வைணவப் பெரியோர்கள் தம் பண்புகளாகக் கொண்டிருந்தனர்.

இராமானுஜர் வைணவ சமயத்தை நாடெங்கும் பரப்பியவர். வைணவர்களால் மதிப்புக்குரியவராக வணங்கப்பட்டவர். அவர் ஒருமுறை திருப்பதி சென்றார். திருப்பதி கோயில் நிர்வாக பொறுப்பிலிருந்த பெரிய திருமலைநம்பி என்ற முதியவர் இராமானுஜரை வரவேற்க ஏழு மலைகளையும் கடந்து கீழே வந்து காத்திருந்தார். இராமானுஜர் அவரிடம் "என்னை வரவேற்க யாராவது ஒரு சிறியவரை அனுப்பியிருக்கக் கூடாதா?" என்று கேட்டார். அதற்குத் திருமலைநம்பி "நானும் அதைத்தான் நினைத்தேன். ஆனால் என்னைவிடச் சிறியவர் யாரும் இல்லையே" என்றார். இந்த எளிமை வைணவர்கள் வளர்த்த பண்பாகும்.

**சூடிக்கொடுத்த சுடர்க்கொடி:**

பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவர் பெண். அவர்தாம் ஆண்டாள். திருவில்லிப்புத்தூர் நந்தவனத்தில் பெரியாழ்வார் தாம் கண்டெடுத்த குழந்தையைக் கோதை என்று பெயர் சூட்டி வளர்த்தார். இக்கோதையே ஆண்டாள் என்னும் ஆழ்வார். பெரியாழ்வார் திருமாலுக்கென்று கட்டி வைத்த மாலையை ஆண்டாள் தான் சூடிக்கொண்டு கண்ணாடியில் பார்த்து மகிழ்வார். ஒருநாள் இதைக்கண்ட ஆழ்வார் ஆண்டாளைக் கோபித்துக்கொண்டார்; மாலை புனிதம் கெட்டுவிட்டது என்றார். ஆனால் திருமால் பெரியாழ்வார் கனவில் தோன்றி ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலையே தமக்கு வேண்டுமென்று கேட்டார். பெரியாழ்வாரும் ஆண்டாள் நாச்சியார் சூடிக்கொடுத்த மாலையைத் திருமாலுக்குச் சூட்டுவதை வழக்கமாக்கிக் கொண்டார். இறுதியில் ஆண்டாள் திருமாலோடு இரண்டறக் கலந்தார். பெரியாழ்வார்,

**"ஒருமகள் தன்னை உடையேன்**
**உலகம் நிறைந்த புகழால்**
**திருமகள் போல வளர்ந்தேன்**
**செங்கண்மால் தான் கொண்டு**
**போனான்"** **(நாலா, மர்ரே:299)**

என்று பாடுகிறார். ஆண்டாளின் திருப்பாவை, தமிழகத்து வீதிகளில், மார்கழி மாதத்தில் பாடப்பெறுகின்றது.

**குலசேகரன்:**

பன்னிரண்டு ஆழ்வார்களில் மற்றொருவர் குலசேகரர். இவர் சேரமன்னர். திருமாலிடம் பேரன்பு கொண்டவர். திருப்பதி மலைமீது மீனாகவும் வண்டாகவும் குருகுப் பறவையாகவும் நடந்து செல்லும் படியாகவும் விளங்க வேண்டுமென்று நெஞ்சுருகப் பாடும் அவர்.

**"எம்பெருமான்**
**பொன்மலையில் ஏதேனும்**
**ஆவேனே"** **(நாலா, மர்ரே: 1440)**

என்று கூறுகிறார். குலசேகரர் ஒருமுறை இராமாயணக் கதை கேட்டுக் கொண்டிருந்தார். காட்டில் இருந்த இராமனோடு போரிடக் கரன் முதலான 14,000 வீரர்கள் திரண்டனர் என்று கதை சொல்லும்

பாகவதர் சொல்லிக் கொண்டிருந்தார். குலசேகரர் நடப்பது கதை என்பதை மறந்தார். அப்படி ஒரு நிகழ்ச்சி நடக்கப் போவதாக நினைத்தார்; இராமனைக் காப்பாற்ற வேண்டுமென்றும் கருதினார். எனவே தம் அமைச்சரை அழைத்து 'நம் படைகளை உடனே புறப்பட செய்யுங்கள். இராமனைக் காக்க வேண்டும்' என்று கூறினார். அந்த அளவு பெருமாள்மீது குலசேகருக்கு அன்பு இருந்தது. தானே தசரதனாக இருந்து அவர் பாடியுள்ள பாடல்கள் கல்லையும் உருக்கிவிடும். இது மட்டுமா? இந்த அரசர் தன்னையே தசரதனாக நினைத்துக் கொண்டு, இராமன் காட்டுக்குப் போவது பற்றிக் கருதினார், அவர் உள்ளம் அழுதது.

**இராமானுஜர்:**

வைணவ சமயத்தைப் பிற்காலத்தில் வளர்த்த பெருமை இராமானுஜரையே சாரும். இவர் பெரிய சீர்திருத்தவாதி. இவர் எம்பெருமானார் என்றும் யதிராஜர் என்றும் அழைக்கப்பட்டார். திருக்கோஷ்டியூர் நம்பி என்ற பெரியவர் யாருக்கும் சொல்லக்கூடாது, நீ மட்டும் கேட்டுக்கொள்" என்று கூறிய நாராயண மகா மந்திரத்தை இராமானுஜர் திருக்கோஷ்டியூர் கோவில் மதிலேறி நின்று ஊரார் எல்லாரும் கேட்க உரைத்தார். "குருவாகிய நான் சொன்னதை விட்டுவிட்டுத் தவறு செய்த உனக்கு நரகம் கிடைக்கும் என்பது தெரியுமா?" என்று கேட்டார் திருக்கோஷ்டியூர் நம்பி. அதற்கு இராமானுஜர் "தெரியும். நான் ஒருவன் நரகத்துக்குப் போனாலும் மகாமந்திரம் கேட்ட எல்லாரும் வைகுந்தமாகிய சொர்க்கத்துக்குப் போவார்களே என்றுதான் அப்படிச் செய்தேன்" என்றார். இராமானுஜர் தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பூணூல் அணிவித்து அவர்களைத் திருக்குலத்தார் என்று அழைத்தார். சமய உலகில் வளர்த்த பண்பாடு மிகவும் போற்றத்தக்கது.

**முடிவுரை**

சைவமும் வைணவமும் தமிழ்நாட்டில் பக்தி இயக்கத்தை வலிமை மிக்கதாக வளர்த்தன. கோயில்கள் பெருக இந்தச் சமயங்கள் ஆற்றியுள்ள தொண்டு மிகவும் பெரியது. சாதி பேதமற்ற சமரசத்தை இந்தச் சமயங்கள் வளர்த்தன; தமிழை வளர்த்தன; மக்களிடையே கலந்து பழகும் ஒரு சமுதாய உணர்வையும் இவை உருவாக்கின; மேலும், மனித உளவியல் மேம்பாட்டிற்கும் வைணவ சமயம் பெரும் பங்களித்தது. திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், குலசேகரரும், இராமானுஜரும் பேணிவளர்த்தது நம் தமிழ்ப் பண்பாடு. வேறுபட்ட சமயங்களுக்கிடையில் ஒரு பண்பாட்டுக் கயிறு ஊடாடிக்கிடப்பதை நாம் காணலாம். இதுவே தமிழகத்தில் மிகப்பெரிய வலிமை.

**துணைநூற்பட்டியல்:**

1. ஆசிரியர் மயிலை சீனி.வேங்கடசாமி - சமயங்கள் வளர்த்த தமிழ், 2005 - கௌரா பதிப்பகம், சென்னை-5.
2. முனைவர் பாலசுப்பிரமணியன்.ப - வைணவம் வளர்த்த தமிழ், 2021 - சங்கர் பதிப்பகம், சென்னை-49.
3. பேராசிரியர் டாக்டர் சுப்புரெட்டியார்.ந - வைணவமும் தமிழும், 2008 - அப்பர் அச்சகம், சென்னை-108.
4. திரு. ஆர்.வி.பதி - வைணவம் வளர்த்த மகான்கள், 2014 - புஸ்தகா பதிப்பாகம், சென்னை.
5. மகாவித்வான் கே.ஆறுமுக நாவலர் - சைவமும் வைணவமும், 2010 - ஸ்ரீ செண்பா பதிப்பகம்,

சென்னை.

6. திரு.மு.கோபாலகிருஷ்ணன் - வைணவமும் சமூக மாற்றமும், 2016 - பாவை பதிப்பகம், சென்னை.
7. திரு.அழகர் நம்பி - வைணவம் ஓர் வாழ்க்கை நெறி, 2010 - திருமகள் நிலையம், சென்னை.
8. முனைவர் இரா.வா. கமலக்கண்ணன் - தொண்டை நாடும் வைணவமும், 2013 - யாழினி பதிப்பகம், புதுச்சேரி.
9. திரு.சி.எஸ்.தேவநாதன் - வைணவம் வளர்த்த பன்னிரு ஆழ்வார்கள், 2011 - விஜயா பதிப்பகம், கோவை.
10. ஆசிரியர் திரு.இந்திரா பார்த்தசாரதி - தமிழ் இலக்கியங்களில் வைணவம், 2023 - பரிசல் வெளியீடு, சென்னை.